கூடுதல் மாவட்ட மற்றும் அமர்வு நீதிமன்றம் எண்.3 தாராபுரம்

மோட்டார் வாகன விபத்து உரிமைக்கோரிக்கை தீர்ப்பாயம், தாராபுரம்

அவ.எண். 231/2019

2020 ம் ஆண்டு 18.02.2020 பி.வா.சா. 4

சாட்சியின் சாட்சியம் திரு.பி.கருணாநிதி , பி.எ.பில்., கூடுதல் மாவட்ட மற்றும் அமர்வு நீதிபதி (மோ.வா.வி.உ.கோ.தீ) தாராபுரம் அவர்களால் உறுதி கூறப்படுகிறது.

| | |
|---|---|
| பெயர் மகுடேஸ்வரன் | தொழில் |
| க/த/பெ ராமகிருஷ்ணன் | கிராமம் |
| வயது | தாலுகா |
| ஜாதி | மாவட்டம் |
| சமயம் | |

குறுக்குவிசாரணை வாதி தரப்பில்

சத்தியமாக சொல்கிறேன். தாவா வழக்குரையில் உள்ள விவரங்கள் தாவா சொத்து விவரங்கள் ஆகியன எனக்கு நன்கு தெரியும். இந்த வழக்கை யார் போட்டிருக்கிறார்கள் என்றால் ஒரு ஜெயக்குமார் என்பவர் போட்டிருக்கிறார். மேற்படி ஜெயக்குமார் 1ம் பிரதிவாதியின் மூத்த சகோதரியான காலஞ்சென்ற சுசீலா என்பவரது மகள் ஆவார். தாவா சொத்துக்கள் 1ம் பிரதிவாதியின் தந்தையாரான சடகோபால் என்பவருக்கு பாத்தியப்பட்டிருந்தது என்றால் சரிதான். மேற்படி சடகோபால் எந்த ஆண்டு இறந்தார் என்றால் ஆண்டு தெரியாது ஆனால் இறந்துவிட்டார் என்பது தெரியும். தாவா சொத்தின் ஒரு பகுதியை நான் கிரயம் பெறுவதற்கு எவ்வளவு நாட்களுக்கு முன்னால் சடகோபால் இறந்தார் என்றால் அது எனக்கு தெரியாது. தாவா சொத்தின் மூலப்பத்திரம் , உயில் ஆகியவற்றை பார்த்தபிறகுதான் நான் தாவா சொத்தில் ஒரு பகுதியை 1ம் பிரதிவாதியிடமிருந்து நான் கிரயம் பெற்றேன். வா.சா.ஆ 4 தான் நான் கிரயம் பெற்ற சொத்தின் கிரய ஆவணத்தின் பதிவு நகல் என்றால் சரிதான். பி.வா.சா.ஆ 7ம் அதே கிரய ஆவணத்தின் நகல்தான் என்றால் சரிதான். மேற்படி வா.சா.ஆ 4 மற்றும் பி.வா.சா.ஆ 7 ஆகியவற்றில் எந்த மூலப்பத்திரத்தின் அடிப்படையில் தாவா சொத்து நான் கிரயம் பெற்றதாக சொல்லப்பட்டுள்ளது என்றால் எதுவும் சொல்லப்படவில்லை. வா.சா.ஆ 4 மற்றும் பி.வா.சா.ஆ 7 ஆவணங்களில் சொல்லப்பட்டுள்ள சொத்து விவரம் தவறானது என்பதால் ஒரு பிழைதிருத்த பத்திரமும் எங்களால் எழுதிக்கொள்ளப்பட்டது என்றால் சரிதான். எனது தரப்பில் மேற்படி பிழைதிருத்த பத்திரம் வழக்கில் தாக்கல் செய்யப்பட்டுள்ளதா என்றால் அது எனது வழக்கறிஞருக்குதான் தெரியும். என்னிடம் காட்டப்படும் வா.சா.ஆ 5 தான் நான் கிரயம் பெற்ற சொத்தின் பிழைதிருத்த பத்திரத்தின் சான்று நகல் என்றால் சரிதான். மேற்படி வா.சா.ஆ 5ல் மூலப்பத்திரத்தின் விவரம் குறிப்பிட்டு சொல்லப்படவில்லை என்றால் சரிதான். வா.சா.ஆ 4ல் கண்டுள்ள சொத்து விவரமும் வா.சா.ஆ 5ல் கண்டுள்ள சொத்துவிவரமும் முற்றிலும் மாறுபட்டுள்ளது என்றால் சரிதான். சாட்சி தற்போது டவுன் சர்வே நம்பர் மட்டுமே மாறியுள்ளதாக கூறுகிறார். சொத்துவிவரத்தின் செக்குபந்தியும் மாறியுள்ளது என்றால் சரிதான்.

நான் கிரயம் பெற்ற தாவா சொத்தின் ஒரு பகுதியை கிரயம் பெறுவதற்கு முன்னால் 1ம் பிரதிவாதியிடம் இருந்து அவரது தந்தையாரின் இறப்பு சான்று, வாரிசு சான்று ஆகியவற்றை வாங்கி பார்த்தீர்களா என்றால் வாங்கி பார்த்தேன். எனது தரப்பில் மேற்படி இறப்பு மற்றும் வாரிசு சான்றிதழ் வழக்கில் தாக்கல் செய்யப்படவில்லை என்றால் சரிதான். தாவா சொத்தை பொறுத்து நான் பெற்ற கிரயமும் அதன்பிறகு ஏற்பட்ட பிழைதிருத்தமும் செல்லக்கூடியதல்ல என்றால் சரியல்ல. தாவா சொத்தை நான் கிரயம் பெறுவதற்கு முன்னதாகவே சடகோபாலின் வாரிசுகள் யார் யார் என்பது எனக்கு தெரியும். சடகோபாலின் வாரிசுகள் யார் யார் என்றால் அவரின் மனைவியும் 1ம் பிரதிவாதியும் அவரது சகோதரிகளான லேட் சுசீலா மற்றும் 3ம் பிரதிவாதியான கலாவதி ஆகியோர் ஆவர். இறந்துபோன சுசீலாவின் மகன்தான் இந்த வழக்கின் வாதி என்றால் சரிதான். 1ம் பிரதிவாதியை தவிர சடகோபாலின் மற்ற வாரிசுகளுக்கும் தாவா சொத்தில் உரிமை உள்ளது என்றால் சரிதான். வாதி தாவாவில் கேட்டுள்ள பரிகாரம் சரியானதுதானா என்றால் சரியானதல்ல. வாதி கேட்டுள்ள பரிகாரத்தை நான் ஆட்சேபிக்க முடியாது என்றால் சரியல்ல.

குறுக்குவிசாரணை 1ம் பிரதிவாதி தரப்பில்

குறுக்குவிசாரணை இல்லை என தெரிவிக்கப்பட்டது.

குறுக்குவிசாரணை 3 முதல் 5 பிரதிவாதிகள் தரப்பில்

வாதி தரப்பு குறுக்கு விசாரணை 3 முதல் 5 பிரதிவாதிகள் தரப்பில் ஏற்றுக்கொள்ளப்பட்டது.